திரு. கே. அறிவழகன் : வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி கிடைப்பதால் ரூ. 500-க்கு அதிகமாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ஒரு முறையும் அதற்குக் குறைவாக வாங்குகிறவர்களுக்கு ஒரு முறையும் அரசு கடைப்பிடிக்கிறார்கள். நம்முடைய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் லாயிட்ஸ் ரோடிலும், ஃபோர்ஷோர் எஸ்டேட்டிலும் மிகக் குறைந்த வாடகையில் இருக்கிறார்கள் என்று அங்கே இருக்கிற மற்றவர்கள் கருதும் வகையில் ரூ. 60 வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால், இந்த முறையை மறுபடியும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : நகர ஈட்டுப்படி அல்லது டி.ஏ. சம்பந்தமானவற்றைப் பரிசீலனை செய்வது என்பது முதலமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் கவனிக்கவேண்டிய காரியமாகும். என்னைப் பொறுத்த வரையில், வீட்டைக் கட்டி வாடகைக்கு விடுவது தான் என்னுடைய வேலை. ஆகையால் இப்போது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வாடகைக்கு விடுவதன் மூலமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 80-க்கு மேல் அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. அதையும் சம்பளத்தில் சேர்த்தால் கிட்டத்தட்ட மாதம் ஒன்றுக்கு ரூ. 100 அதிகமாகச் சம்பளம் கிடைக்கும் என்று கருதுகிறேன். ஐ.ஏ.எஸ். பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் தான் கவனிக்கவேண்டியவர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

Family pension

*102. *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether any petition has been received from Thirumathi D. Dhanalakshmi, widow of late Thiru N.A. Dhandapani, Forest Range Officer, Thirupattur, North Arcot district, for the payment of family pension and gratuity consequent on the demise of her husband on 23-7-69 while in active service at Alangayam, Tirupattur Range, Salem division;

(*b*) whether sanction has been accorded for the payment of family pension and gratuity ; and

(*c*) if not, the reasons therefor ?

குடும்ப ஓய்வூதியம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர், வனத்துறை அதிகாரியான காலஞ் சென்ற திரு. என். ஏ. தண்டபாணியின் மனைவி திருமதி டி. தனலெட்சுமி அம்மாள் தனது கணவர் சேலம் கோட்டம், திருப்பத்தூர் சரகத்தில் ஆலங்காயத்தில் பணியில் ஈடுபட்டிருந்தபோது 23-7-1969 அன்று தனது கணவன் இறந்ததனால் தமக்குக் குடும்ப ஓய்வூதியமும் பணிக்கொடையும் கொடுக்கப்பட வேண்டுமென்று மனுச் செய்து கொண்டாரா ?

(இ) குடும்ப ஓய்வூதியமும் பணிக் கொடையும் வழங்கப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

[9th September 1970

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) இவ்வினு எழவில்லை.

THIRU A. R. DAMODARAN : May I know when the sanction was accorded for the payment of family pension and gratuity to this lady ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : 24—7—1969-லிருந்து 14-1-71 முடிய ஒரு மாதம் 113 ரூபாயும், 15-1-71 முதல் கடைசி வரையில் ரூ. 60-ம் அந்த அம்மையாருக்குக் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிருர்கள். கிராஜுடியைப் பொறுத்த வரையில், ரூ. 2587 கொடுக்க வேண்டியதிருந்து, அதில் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பணம் ரூ. 1425-40 இருந்ததால், அதைக் கழித்துக் கொண்டு பாக்கியை அந்த அம்மையாரின் வயது வந்த பெண்கள் இருவருக்கும், வயதுக்கு வராத பெண்கள் இருவருக்கும் அந்த அம்மையாருக்கும் சேர்த்து ஐந்து பேருக்குமாகப் பணம் கொடுக்கப்பட்டது.

THIRU A.R. DAMODARAN : May I know the date, Sir ?

THE HON. THIRU O. P. RAMAN : That is not available.

Basin Bridge Thermal Power Station

*103. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) the action taken on the advance of Rs. 32 lakhs by the Tamil Nadu Electricity Board to a private contractor for the Basin Bridge Thermal Power Station without proper scrutiny ; and

(*b*) the total loss sustained by the Board ?

பேசின் பாலம் அனல் மின்சக்தி நிலையம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாடு மின்சார வாரியம் சரிவரப் பரிசீலனை செய்யாமல் தனிப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு பேசின் பாலம், அனல் மின் சக்தி நிலையப் பணிக்காக ரூ. 32 லட்சம் முன் பணம் கொடுத்ததன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

(இ) இதனுல் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட மொத்த விரயம் என்ன ?